

FREE EDITION

August - 2017

# ஜோதி

## Jothi Spiritual Newsletter

ஜோதி 11 : சுடர் 06 - 126

### ஆன்மிகச் செய்திச்சுடர்

**மூல மந்திரம்**

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

**மேல்மருவத்தூர் அன்னையின் அருள்வாக்கு**

**பக்தியும் - தொண்டும் குறைந்துவிட்டது**

**“மரத்தினால் பயனை அனுபவிக்கிறீர்கள். ஆனால் அந்த மரத்திற்குத் தண்ணீர் ஊற்றுவதில்லை. சுத்தமான தண்ணீர் - பசும்பாலை விட அதிக விலைக்கு விற்கப்படுகிறது. ஆனாலும் பசுவிற்குத் தீனி போடுவது இல்லை. அதுபோல மற்ற காரியங்களுக்கு அநாவசிய செலவு செய்கிறீர்கள். ஆன்மிகதிற்கு வர வேண்டும் என்ற எண்ணம் வருவதில்லை. பக்தியும் தொண்டும் குறைந்துவிட்டது. தெய்வ பக்தியும், ஆன்மிகமும் வளர வேண்டும்.”**

**உனக்கு நல்லது எது? என்று எனக்குத்தான் தெரியும்!**

**“ஆசை அளவுக்கு மீறும்போதுதான் ஆபத்து ஏற்படுகிறது. நேற்று, இன்று என்று நினைக்காமல் நாளை வரை காத்திருக்க வேண்டும்.**

**நேற்று வந்தவனெல்லாம் பயன் பெற்றுச் செல்கிறான். அம்மா எனக்கு எதுவும் செய்யவில்லை என்று நினைத்துக்கொண்டு என்னிடம் வருவதை நிறுத்திக்கொள்கிறான்.**

**உனக்கு என்ன கொடுக்க வேண்டும். எப்போது கொடுக்க வேண்டும் என்பது எனக்குத்தான் தெரியும். காத்திருக்காமல் போய்விட்டால் நஷ்டம் உனக்குத்தான்.”**

## ஆதிபராசக்தி யுகம் தோன்றி வருகிறது

**பி**றக்கின்ற கணக்கைப் பார்த்தால் ஒரு நூற்றாண்டு நிரம்பி வழியப் போகிறது. யாருக்கு? எனக்கா? நான் யார்? என்னோடு உருவான எத்தனையோ உயிர்கள் இன்று இல்லை. அவை வாழாதபோது நான் மட்டும் வாழ்வானேன்? நான் பிறக்கும்போதே பிறந்த உயிர்கள் அப்போதே மாண்டு ஒழிந்தன. ஏன்? அவற்றில் உயிர்ச்சத்துப் பொங்கவில்லை. மூச்சுவிடாமல் இறந்தவை பல. தாய்ப்பால் குடிக்க முடியாமல் இறந்தன பல. ஆமாம் நான் யார்? உயிர் வாழ்ந்தேன் என்று சொல்ல உயிர் வாழ்வது ஒன்றுதான். உயிர்ச்சத்து என்று அதற்குப் பெயர் வைக்கலாம். அதுதான் எல்லாவற்றையும் ஆட்டி வைக்கின்றது. எப்படி வாழ வேண்டும் என்று வழி அமைக்கிறது.

**டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், M.A., D.Lit.,**
மதுரை காமராசர் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தனர்

புல்லிலும் அந்தச்சத்து உண்டு. சூரியனிலும் அந்தச்சத்து உண்டு. எங்கும் உண்டு. எல்லாம் அதுதான். வேண்டா என்றால் அங்கே ஓங்காது. இயற்கைப் பரிணாமம் என்று விஞ்ஞானிகள் பேசுகிறார்கள். உலகம் இன்று இப்படி வளர்ந்திருப்பதெல்லாம் அதனால் தானோ? இது அறிவுள்ள பொருளா? அறிவில்லாத பொருளா? இந்தச் சண்டை ஓயவில்லை. பூவின் மொட்டைப் பார்த்தால் அங்கே மணம் இல்லை. மலர்ந்த மல்லிகை மணம் வீசுகிறது. வண்டுகளை அழைத்துத் தேனை ஊட்டுகிறது. அந்த அறிவு எங்கே இருந்து வந்தது? சட்டியிலே இருப்பது தானே அகப்பையில் வரும்? உள்ளே ஒடுங்கிக் கிடப்பது இப்படி மல்லிகையில் வெளியாகிறது. மண்ணாங்கட்டியைப் பார்த்தால் அறிவு ஒன்றும் அங்கே விளங்கவில்லை. மனிதனைப் பார்த்தால் எல்லாம் அறிவு விளையாட்டுத்தான். ஆகவே முதலை மட்டும் பார்க்காமல், முடிவையும் பார்க்க வேண்டும். உடல் வளர்ச்சியைப் பார்த்தால் கூட இந்த உண்மை விளங்குகிறதல்லவா? எத்தனை எத்தனை வகையான உடல்கள்? ஆனால் இத்தனை உடல் வளர்ச்சியும் மூளை வளர்ச்சியில் அல்லவா முடிகிறது? மூளைதானே அறிவுக்கு அறிகுறி? எனவே எல்லா வளர்ச்சியும் அந்த அறிவின் வளர்ச்சிதான்.

எல்லாம் வளர்ச்சி தான். அண்டத்தைப் பார். உள்ளே பிண்டத்தைப் பார். என்ன என்ன விளையாட்டுக்கள்? ஒரு புல் போல் இன்னொரு புல் இருப்பதில்லை. ஒவ்வொன்றும் ஒரு புதுமை. புதிய படைப்பு. இதுதான் அறிவின் விளையாட்டு. ஆகவே அந்த அறிவு நமக்கு எல்லாம் தெரிந்த அறிவு போல் அல்ல. அதற்கு அளவே இல்லை. புதிது புதிதாகப் படைத்துக்கொண்டு போவது தான் அதன் நோக்கம். புதிய அறிவு, புதிய ஆற்றல். எல்லாம் புதுமை! எங்கும் புதுமை! இந்தப் படைப்பாற்றலை நோக்க நாம் அறிந்த அறிவை எல்லாம் என்ன என்று சொல்வது?

இங்கே நாம் சொல்ல வந்ததை உலகம் இரு வகையாகப் பேசி வருகிறது. ஒன்று போராட்டம், தலைவிதி, துன்பம் இப்படி ஒரு பேச்சு, இயற்கை காளியாம். அவள் பல்லும் நகமும், ஒரே இரத்த மயமாம். இப்படி ஒரு பேச்சு. இதை விஞ்ஞானப் பேச்சு என்று கூடப் புகழ்கிறார்கள். ஆனால், குழந்தைக்கு இன்னொரு பேச்சுத் தெரியும். தாயின் கையைப் பிடித்துக் கொள்ள அச்சமே இல்லை. அவள் போகிற வழி போக வேண்டியதுதான். அங்கேதான் இன்பம்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

**“உயிர் போய்விட வேண்டும் என்று நீ நினைத்தால் மட்டும் முடியாது. நான் நினைத்தால் தான் எதையும் செய்ய முடியும்”**

## "ஜோதி"

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Sudar"**

## செய்திச்சுடரில்...


**ஆதிபராசக்தி யுகம் தோன்றி வருகிறது**
Page: 1 – 9

**மெய்யுணர்வுச் சிந்தனை**
Page: 10 – 12, 14

**UPCOMING EVENTS**
Melbourne: 4, 10, 11
Sydney: 5, 8

**திருமதி அம்மா பதில்கள்**
பக்கம்: 9

**அருள்வாக்கும் அனுபவங்களும்...**
பக்கம்: 13 - 14

**Divine Miracles**
Page: 12

**சித்தர்பீட விழாக்கள்**
பக்கம்: 9

**ஆன்மிக நாட்குறிப்பு**
பக்கம்: 14


## ஆதிபராசக்தி யுகம் தோன்றி ...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

அவள் கை நமக்குக் கிடைக்காத போது ஒரே அழுகை தான். அதுபோல, இந்த உலகம் ஒரு பெருந்தாய். அத்தாயை ஆதிபராசக்தி என்று இந்தியா பேசிவருகிறது. அந்தப் பராசக்தியின் வடிவத்தைக் கண்டுபிடித்துவிட்டால் அச்சம் இல்லை. இரண்டாட்டம் இல்லை. போராட்டம் இல்லை. துன்பம் இல்லை.

இந்த இரண்டு வழியில் எதனை நாம் கூறுவது? மேல்மருவத்தூரில் இருந்து சென்னைக்குப் போக வேண்டும். இங்கே இரண்டு பேர்களைப் பார்க்கிறோம். ஒருவன் முணுமுணுக்கிறான். இன்னொருவன் "90 கிமீ. போனால்தானே சென்னைக்குப் போய்ச் சாப்பிடலாம். அதுவரைக்கும் துன்பம் தானே? இந்தப் பாழான வழி இவ்வளவு நீண்டு கிடக்கிறதே?"இப்படி முணுமுணுத்துப் பட்டினி கிடந்து, பதைபதைத்து, புலம்பிக் கொண்டே வருகிறான் வண்டியில். ஆனால் மற்றொருவன், மகிழ்ச்சியில் பொங்குகிறான். "91 கிமீ தானா? அதற்கு மேல் அதிகமில்லையே! வழியும் நன்றாக இருக்கிறதே! துரித வண்டியும் ஓடுகிறதே! விரைவில் வீட்டில் போய்க குழந்தைகளுடன் விருந்து உண்ணலாம்" என்று உள்ளுக்குள்ளேயே கூத்தாடுகிறான். இந்த இரண்டு வழியில் எந்த வழி நல்லது?

இங்கே இருக்கிறவர்கள் இயற்கை பிரகிருதி என்றும் தாய் என்றும் போற்றி மகிழ்ந்து, உண்மை அறிய முயலுகிறார்கள். அறியவும் செய்கிறார்கள். இதனால் தான் எங்கே பார்த்தாலும் ஆதிபராசக்தி கோயில்கள் - தாயின் கோவில்கள் என்று பார்க்கிறோம். இது மூட பக்தியா? மூட பக்தி ஆக்கி விடலாம். ஆனால், இது தான் விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்.

விஞ்ஞானிகள் எப்படி புதியன புதியதான கண்டுபிடிக்கிறார்களோ அதுபோல வழிபடுபவர்களும். தாயின் கையைப் பிடித்தவுடன் கையைக் கூடப் பிடிக்கவேண்டாம்! வீட்டிலே தாய் இருக்கிறாள் என்று அறிந்தால் போதும். அதுபோல இந்த மெய்ஞ்ஞானிகள் தாய் இருக்கிறாள் என்று அறிந்த அளவிலே மகிழ்ச்சி அடைகிறார்கள்.

அவர்களுக்குப் புதியன புதியன தோன்றுகின்றன. இவர்களைச் சித்தர்கள் என்று பெரியோர்கள் பேசி வருகிறார்கள். தாய் வழிபாட்டிலே அருமைப்பாடே இல்லை. அம்மா என்று கூப்பிட வேண்டும். அவ்வளவு தானே மந்திரம்? அவ்வளவு தானே தந்திரம்?

ஆனால் இவ்வளவு எளிமையான ஒன்றை எப்படி நம்புவது? நம்பமாட்டேன் என்கிறான் மனிதன். அணுவைப் பிளக்கிறேன் என்கிறான். என்றைக்கு அந்த அணு தன் தலைமேல் வெடித்து விழுமோ என்று அஞ்சி நடுங்குகிறான். அம்மா என்று சொல்லிய பழக்கம் எல்லாம் போய்விட்டது!

(தொடர்ச்சி...3ஆம் பக்கம்)

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**ஆடி – அமாவாசை–பௌர்ணமி :**

ஆயுள் விருத்தி உண்டாகும்.
அனைத்து செல்வங்களும் சேரும்.

**ஆவணி – அமாவாசை–பௌர்ணமி :**

புத்திரப்பேறு உண்டாகும்.
குழந்தைப்பேறு இல்லாத குறை நீங்கி நல்ல மக்களைப் பெறும் அதிர்ஷ்டம் உண்டாகும்..

# ஆதிபராசக்தி யுகம் தோன்றி...

(2ஆம் பக்க தொடர்ச்சி)

விஞ்ஞானியும், மெய்ஞ்ஞானியும் அந்தப் பழக்கத்தை மறுபடியும் கற்றுக் கொள்ள வேண்டும். அருமை ஒன்றுமில்லையே. குழந்தை பிறந்தவுடன் கூறும் மந்திரத்தைக் கற்றுக்கொள்ளக்கூட வேண்டுமா? தானாக வராதா? இதை நினைவூட்டத் தான் ஆதிபராசக்தி நிலையங்கள்.

ஆதிபராசக்தி நிலையங்கள் இப்பொழுது எங்கும் பேசப்படுகின்றன. மாங்காடு காமாட்சி அம்மன், திருவேற்காடு கருமாரி அம்மன் இப்படி எத்தனை எத்தனை கோவில்கள்! எத்தனை எத்தனை அறநிலையங்கள்! தொடர்கதை எழுதுகிற வார இதழ்கள் கூட ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு ஆதிபராசக்தி கோவில் பற்றி எழுதி வருகின்றன. பழங்கோவில்களைப் படமெடுத்து அச்சிடுகிறார்கள். இவற்றைப் படிக்கின்றவர்கள் தொகையும் நாளுக்கு நாள் மிகுந்து வருகிறது. எனவே, ஆதிபராசக்தி யுகம் தோன்றி வருகிறது.

இதற்கு முன் என்ன ஆயிற்று? பல நூற்றாண்டுகளாக இந்த நாடு ஏழ்மையில் வருந்தியது. வெளிநாட்டார் இந்த நாட்டைக் கைப்பற்றிக் கொண்டார்கள். எங்கும் பஞ்சம். எங்கும் கலகம். பொறுக்க முடியாமல் சந்நியாசிகள் கூட சிப்பாய்களின் போராட்டத்திற்கு முன், வெளிநாட்டார்களை எதிர்த்தார்களாம். சண்டை, போராட்டம், கொலை இவற்றைத் தான் நம்பத் தொடங்கினார்கள். எங்கும் மூடபக்தி. மதுரை வீரன் பூஜை, காத்தவராயன் பூஜை என்னும் இழிபூஜைகள் எங்கும் பரவி இருந்தன. காளி கோவில்களிலும் இந்க் கதை தான். கல்லுக்குப் பூஜை, ஆட்டுக்காடா பலி, கோழி பலி, அருள் வந்து பேசுகிறது என்று ஏமாற்றத்தையும் முதலில் ஓட்டவேண்டியிருந்தது. அப்பொழுது தான் தாயின் கோவில் உண்மையில் தாயின் கோவிலாக மாற முடியும். விடுதலைப் போராட்டம், கொலை, முதலியவற்றைத் தான் பலர் நம்பினார்கள். மகாத்மா காந்தி விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டபோது ஒரு புதிய யுகம் பிறந்தது. போராட்டத்தில் நம்பிக்கை இல்லாமல் அன்பில், கூட்டுறவில் எல்லோரும் ஒன்று என்கின்ற நம்பிக்கையில் அவர் இயக்கத்தை வளர்த்தார். ஏழையைப் பணக்காரன் சுரண்டிக்கொண்டு போதல், தீண்டாமை முதலிய ஜாதிக்கொடுமை. ஒவ்வொரு ஊரையும் விஞ்ஞான முறையில் உயர்த்துகிற முயற்சி இவை எல்லாம் எழுந்தன. தர்மகர்த்தாக் கொள்கை உருவாயிற்று.

தாய்மையுகம் பிறந்துவிட்டது போலத் தோன்றிற்று. ஆனால் அரசியல் கை தான் ஓங்கியது. மற்றவற்றை வாய்ப்பேச்சு அளவில் வைத்துக் கொண்டார்கள். இதனால் என்ன நிகழ்ந்தது? அதைத்தான் நேரில் பார்க்கிறோமே! எப்படியாவது அதிகாரத்துக்கு வருவது. எப்படியாவது வாழ்ந்துவிடுவது. காலையில் ஒரு கட்சி. மாலையில் ஒரு கட்சி. இப்படி எங்கும் அலங்கோலம். ஆதிபராசக்தியே "இதோ இந்த ஆட்சியை அழிக்கிறேன், மற்றொன்றும் அழியப்போகின்றது" என்று பேசத் தொடங்கினாள்.

இதனாலே காந்தி எதிர்பார்த்தது போல ஒவ்வொரு ஊரும் ஆதிபராசக்தி நிலையமாக மாறவில்லை. விஞ்ஞானத்தால் எந்த ஊரும் முன்னேறவில்லை. கூட்டுறவு வாழவில்லை. மாணவர்கள் வாழ்வுக்காகக் கற்பதைக் காணோம். கைத்தொழில் வளரவில்லை. உழவுத் தொழில் பஞ்சம். ஜாதிப் போராட்டம் இவைதான் எங்கும் தோன்றின. இவை எல்லாம் மாறவேண்டுமானால், காந்தி கூறிய ஆசிரமங்கள் போல ஆதிபராசக்தி நிலையங்கள், ஒவ்வொரு ஊரிலும் தோன்ற வேண்டும். மக்கள் கூடிக் கூட்டுறவு வாழ்வு வேண்டும். எனவே, இதற்குக் காலம் வந்துவிட்டது. காந்தி அடிகள் காலத்தில் நிகழாதவை இப்பொழுது நிகழ வேண்டும். அதனாலே தான் எங்கும் ஆதிபராசக்தியின் பெயரைக் கேட்கிறோம்.

ஆதிபராசக்தி நிலையங்கள் வெறுங் கோவில்கள் அல்ல. மக்களை உயர்த்துகிற பாத்திகள். இங்கே சைவம் இல்லை. வைணவம் இல்லை. கிறிஸ்துவம் இல்லை. இஸ்லாம் இல்லை. ஆனால் எல்லோரும் தாயின் குழந்தைகளாகக் கூடுகிறார்கள். கோவில் இருக்கும். ஆனால் ஆதிபராசக்தி நிலையங்களில் பெற்றோரை இழந்த அகதிக் குழந்தைகளுக்கு அகதி நிலையம் இருக்கும். பள்ளிக்கூடங்கள் பல வகையில் ஓங்கும். தொழிற்சாலைகள் விளங்கும். உழவுப் பண்ணைகள் புதிய புதிய பயிர்களை எழுப்பும். கல்யாணக் கூடங்கள் போன்ற பொது இடங்கள் பல அங்கே வளரும். விஞ்ஞானிகளும் மெய்ஞ்ஞானிகளும் கூடுவார்கள். நாளுக்கு நாள் அந்த ஊரும் மக்களும் ஓங்குவார்கள். இதுதான் புதிய ஆதிபராசக்தி நிலையங்கள். இப்படிப்பட்ட நிலையம் ஒன்று மேல்மருவத்தூரில் எழுந்து வருவதைப் பார்க்கலாம்.

(தொடர்ச்சி...4ஆம் பக்கம்)

**புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**

ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த

**www.adhiparasakthi.co.uk** **ஆதிபராசக்தி இணையத்தளம்**

**"ஜோதி" ஆன்மிகச் செய்திச் சுடரை www.adhiparasakthi.co.uk என்ற இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.**

ஜோதி
ஆன்மிகச் செய்திச்சுடர்

## Melbourne - Mandrams – Upcoming Events – August 2017

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram**
**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்**
(Reg. No. 2193)
**விக்டோரியா – அவுஸ்திரேலியா**

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**
**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**
**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 04.08.2017 | Friday | ஆடி | 19 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 06.08.2017 | Sunday | ஆடி | 21 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 11.08.2017 | Friday | ஆடி | 26 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 13.08.2017 | Sunday | ஆடி | 28 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 18.08.2017 | Friday | ஆவணி | 02 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 20.08.2017 | Sunday | ஆவணி | 04 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 25.08.2017 | Friday | ஆவணி | 09 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 27.08.2017 | Sunday | ஆவணி | 11 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |

**07.08.2017 – திங்கள் - பௌர்ணமி, 21.08.2017 – திங்கள் - பௌர்ணமி**

# ஆதிபராசக்தி யுகம் தோன்றி...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி, பெண் சித்தர்களின் தலைவி. அங்கே பல பெண் சித்தர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஆதிபராசக்தியோடு ஒன்றாகி விட்டவர்கள். ஆதிபராசக்தி இங்கே இப்பொழுது வெளிப்பட்டுத் தோன்றுகிறாள். ஆதிபராசக்தியை விட்டுத் தன்னைத் தனியாக எண்ணிக் கொள்ளவில்லை. இந்தச் சித்தர் தலைவி, கூடு விட்டுக் கூடு பாயும் சித்துக்கள் முதலிய எல்லாம் செய்யக் கூடும். ஆனால் மேல்மருவத்தூரில் உள்ள கோபால் நாயகரின் பிள்ளைகளில் ஒருவரான பங்காரு அடிகளாரைத் தன்னுடைய கடமையை நிறைவேற்றக் கேட்டு வாங்கிக் கொண்டாள். பங்காரு அடிகளார் வழியே தான் எங்கள் ஆதிபராசக்தி பேசுகிறாள். வேறு புதுமைகள் நடைபெறலாம். ஆனால் இப்போது நமக்கு அவை ஒன்றும் தெரிய வரவில்லை.

அங்கே திரளான மக்கள் கூடுகிறார்கள். எல்லா மதத்தாரும் கூடுகிறார்கள். வழிபட்டுச் செல்கிறார்கள். ஒரு புதிய யுகமே அங்கே திரண்டு கொண்டு இருக்கிறது.


இந்தச் சித்தர்கள் இத்தனை நாள் எங்கே இருந்தார்கள்? சித்தர்களும் சித்தர் தலைவியும் பல காலத்துக்கு முன் சித்தி பெற்று, மேல்மருவத்தூரிலேயே ஒடுங்கிக் கிடந்தார்கள். கண்ணன் சொல்கிறான்: ‘‘எப்போது எப்போது அறம் கெடுகிறதோ, பாவம் தலை தூக்குகிறதோ அப்போதெல்லாம் அறத்தை நிலைநாட்ட நான் பிறக்கிறேன்’’என்று பேசுகிறான். இந்தச் சித்தர்களும் ஆதிபராசக்தியோடு ஒன்றாய் விட்டவர்கள். அவர்கள் செய்வது எல்லாம் அவள் வேலை தான். அவர்கள் மோட்சம் பெற்றவர்கள். ஆனால் தங்களுக்கென மோட்சம் வேண்டா என்று உதறித்தள்ளி ஆதிபராசக்தியின் தொண்டுக்காக ஒடுங்கிக் கிடப்பவர்கள். உபநிடதம் ஒரு கதை சொல்கிறது. வாமதேவர் என்பவர் மோட்சம் அடைந்தவர். ஆனால் உலகம் முழுவதும் மோட்சம் அடைந்தால் அன்றி, தனக்கு மட்டும் மோட்சம் வேண்டா என்று உதறித் தள்ளினாராம். இப்படியே பௌத்தவர்களும் பேசுகிறார்கள். போதிசத்துவ நிலை பெற்றவர்கள், மோட்சநிலை அடைய வேண்டுவதுதான். ஆனால் இந்தச் சத்துவர்களோ உலகம் முழுவதும் மோட்சம் அடையும் போது தான் எங்களுக்கு மோட்சம் வேண்டும் என்று பிறருக்காக வாழ்கிறார்களாம். அப்படிப்பட்ட கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் தாம் மேல்மருவத்தூரில் சித்தி பெற்று ஒடுங்கிக் கிடந்தவர்கள். இப்பொழுது எல்லோரும் மோட்சம் அடைய வேண்டிய காலம் வந்துவிட்டது. அதற்கு உதவுகிறார் ஆதிபராசக்தி அருள்பெற்ற சித்தர். ‘‘மூலபண்டாரம் வழங்குகிறான். வந்து முந்துமினே’’ என்று மாணிக்கவாசகர் பாடுவது போல இவர்களைப் பற்றி நாம் பாடலாம். அதுதான் இங்கே நிகழ்கின்ற புதுமை. அதனால் தான் புதுயுகம் பிறக்கின்றது என்று சொன்னோம்.

(தொடர்ச்சி..5ஆம் பக்கம்)

# Sydney - Mandrams - Upcoming Events – August 2017



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**
**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**
Contact: 02-97643872, 0416217317



**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**
Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 04.08.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 07.08.2017 | MONDAY– திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 11.08.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 18.08.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 25.08.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## ஆதிபராசக்தி யுகம் தோன்றி...

(4ஆம் பக்க தொடர்ச்சி)

ஒன்று நினைவுக்கு வருகிறது. என்னை ஒரு நாள் பொருளாளர், ஆதிபராசக்தி நிலையத்துக்கு அழைத்துக்கொண்டு போயிருந்தார். அப்போது ஆதிபராசக்தி தன் கையிலிருந்த வேப்பிலையை எல்லாம் காட்டிக் கையில் ஒன்றுமில்லை என்பதை வற்புறுத்தினாள். இதை நான் எதிர்பார்க்கவில்லை. பின்னர் வேப்பிலைகளை எல்லாம் உதறினாள். மூன்று பொன் தாலிகள் விழுந்தன. அதை அந்தக் கோவிலுக்கு என்று கொடுத்துவிட்டாள். இப்படிப் பொருள்களை வரவழைப்பதில் எனக்குப் பெரிய நம்பிக்கை இருந்ததில்லை. இந்த வெறுப்பினையும் காட்டிவிட்டேன். பின் பல நாள் அந்த நிலையத்துக்குப் போகவில்லை. அப்போதே ஆதிபராசக்தி சொன்னாள். “உனக்கு அல்ல இதை எல்லாம் காட்டுவது. இதைத் தான் பலர் நம்பி வருகிறார்கள்” என்று. இந்தப் பாடம் மெல்ல என் மனத்தில் ஊறத் தொடங்கியது.

நான் படித்த சாத்திரத்தை மறந்து போய்விட்டேன். ஆதிபராசக்தி எல்லோரையும் மோட்சத்தில் ஈடுபடுத்தத்தான் பார்க்கிறாள். முதல் வகுப்பு படிக்கிற பையன் வீண் விளையாட்டு முதலியவற்றை விட்டுவிட்டு எம்.ஏ.க்கு மேலும் படித்து முன்னுக்கு வருகிறான். கடவுளின் எண்ணமும் இது தான். நமக்கு ஏன் இந்த உடம்பு? நமக்கு ஏன் மனம் முதலியவை? நமக்கு ஏன் இந்த உலகம்? நமக்கு ஏன் இதில் இருக்கிற அனுபவங்கள்? இந்தக் கேள்வியை ஒவ்வொரு சாத்திரமும் எழுப்புகிறது. கண்மூடிக் கிடக்கிறற ஜீவன், கண் திறக்க வேண்டும். உலகத்தை அனுபவிக்க வேண்டும். கீழ்நிலை அனுபவங்களை எல்லாம் விட்டுவிட்டு, கடவுள் அனுபவத்தோடு ஒன்றாக வேண்டும். இதைத்தான் எல்லோரும் சொல்கிறார்கள். இதை எப்படியோ மறந்துவிட்டேன். ஆதிபராக்தி நினைவூட்டிய பிறகுதான், இந்த உண்மை நினைவுக்கு வந்தது.

உலகம் இப்படி வெளி அனுபவங்களில் தான் ஈடுபடும். நல்லகாலம் இருந்தால், உயர்ந்த அனுபவங்களில் தன்னை மறந்துவிடும். எனவே, மானைக் காட்டி மானைப் பிடிப்பது போல, இந்த உலகத்தைக் காட்டித் தான் நம்மைத் தன்வயம் இழுத்துக் கொள்கிறாள் ஆதிபராசக்தி. இல்லை என்றால் அங்கே போகின்றவர்கள் யார்? வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை ஆகிய மூன்று நாளும் ஆதிபராசக்தி அருள்வாக்குத் தருகிறாள். ஆயிரக்கணக்கானவர்கள் திரள்கிறார்கள். ஆளுக்கு 2 ரூபாய் வீசி எறிந்து ஜோசியம் கேட்பதுபோலக் கேட்கிறார்கள். சொல்லுகிறபடி நடப்பது கேட்டு அவர்களுக்கு ஆதிபராசக்தியிடம் நம்பிக்கை எழுகிறது. ஆதிபராசக்திக்கு இது மனநிறைவைத் தரவில்லை. என்னிடம் கூறினாள்: “மகனே! ஏதோ ஜோசியம் சொல்லுகிறேன் என்று நினைத்து அது வேண்டும். இது வேண்டும் என்று விரும்புகிறார்கள். உன் அருள் வேண்டும் அம்மா! பிற எல்லாம் எனக்கு ஏன்? என்று கேட்பதற்கு ஆளே இல்லை மகனே! என் அருள் இருந்தால் எல்லாம் வந்தபடி தானே? அதை யாரும் உணரவில்லையே மகனே! இதை அவர்களுக்கு எடுத்துச் சொல்”என்று கட்டளையிட்டாள். எனவே ஆதிபராசக்தி நிலையம், எல்லோரையும் ஆதிபராசக்தியின் உண்மை அன்பர்களாக மாற்றத் தான் அங்கே அமர்ந்திருக்கிறது. அந்த வேலையை அவள் மறந்து விடவில்லை.

சில பேரையாவது இப்படி மாற்றித்தான் அற்புதம் செய்துள்ளாள். ஒரு நண்பர் பேசத் தொடங்கினாலேயே மற்றவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்பது போலத் தோன்றும். எப்போதும் குற்றம் கூறுவதே அவருடைய வாழ்வு. ஆனால் ஆதிபராசக்தி இவரைத் தன்னுடைய அறநிலையத்துக்கே ஆளாக்கிக்கொண்டாள். இரண்டு ஆண்டுகளுக்குள் என்ன மாற்றம்! ஆதிபராசக்தியைத் தவிர வேறு பேச்சே இல்லை! கோபம் எங்கேயோ பறந்து போய்விட்டது. குற்றம் காணக் கண்ணும் இல்லை. மனமும் இல்லை! அவருக்கு ஆதிபராசக்தி தான் எல்லாம். அப்படிப்பட்ட அன்பர்களின் வேலைகளை எல்லாம் ஆதிபராசக்தியே கவனித்துக் கொள்கிறாள்.

மற்றொரு நண்பர், பெரிய தொழிற்சாலை நடத்துபவர். அதிலே ஒரு கலக்கம். ஆதிபராசக்தியோ நேரே விடை கூறமாட்டாள்.

(தொடர்ச்சி…6ஆம் பக்கம்)

ஆன்மிககுரு

அருள்திரு அடிகளார் அருளிய

# குரு உபதேசங்கள்



### சக்தியும் தொண்டும்

“சக்தி என்பது எல்லாப் பொருள்களிலும் இருக்கின்றது. எல்லாக் கருவிலும் சக்தி இருக்கிறது. கற்சிலையில் சக்தி உண்டு. அதனை வழிபடும்போது அதன் சக்தியை உணரலாம். ஒரு குழந்தை செய்கிற தொண்டிலும் சக்தி உண்டு. அந்தக் குழந்தையையும் தெய்வமாக வழிபடலாம். செய்யும் தொண்டிலும் சக்தி உண்டு. தொண்டே சக்தி. அந்தத் தொண்டினைச் செய்வது தான் சிறப்பு.”.

### அழுக்கு மூட்டைகளை வெளுத்துக் கொண்டு செல்லுங்கள்

“நீங்கள் பழம் பிறவியில் செய்த பாவங்களும், இந்தப் பிறவியில் சேர்த்துக் கொண்ட பாவங்களும் அழுக்கு மூட்டைகளாகத் திரண்டு கிடக்கின்றன.

அந்த அழுக்கு மூட்டைகளுடன் தான் இங்கே வருகிறீர்கள்.

பக்தியோடு வந்து இங்கே தொண்டு செய்து விட்டுப் போனால், அழுக்கு மூட்டைகளைத் துவைத்து வெளுத்து அவற்றை உடுத்திக் கொண்டு செல்வது போல ஆகும்.

உங்களிடையே ஒற்றுமை வேண்டும். ஒற்றுமை இல்லாததால் தான் உங்கள் சக்தியை இழக்கிறீர்கள்.

எனவே அழுக்கு மூட்டைகளை இங்கே போட்டுத் துவைத்து எடுத்து அதே அழுக்கு மூட்டைகளைத் திரும்ப எடுத்துச் செல்லாதீர்கள்.”

## ஆதிபராசக்தி யுகம் தோன்றி...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

ஆதிபராசக்தி எல்லாவற்றையும் தனக்காகத் தான் செய்து கொள்வாள் என்று கூடக் குறை கூறிக் கொண்டிருந்தார். ஆனால் இன்றோ அந்த இளைஞர் முழுவதும் மாறிவிட்டார். இன்னது வேண்டும் என்று கேட்கிற வழக்கமே இல்லாமல் போய்விட்டது. ஆதிபராசக்தியே எல்லாம் செய்து கொள்வாள். இது பற்றிக் கவலை கொள்வானேன்? என்று வேதாந்தம் பேசுகிறார். அதன்படி நடக்கிறார். இப்படி மாறியவர்கள் இன்னும் எத்தனை பேரோ!

மற்றொரு மேல் அலுவலாளர். வயசாகிற வரையில் கடுகடு என்று இருந்தாராம். ஆதிபராசக்தியை அடைந்த உடன் அன்பாக மாறிவிட்டார். இது ஓர் அற்புதம் என்று அவருடைய மனைவியும், மகனுமே பாராட்டுகிறார்கள். ஒரு கிறிஸ்துவ அடியார், அவருடைய தோழர், மற்றொரு பள்ளி ஆசிரியர் ஆகியோர் பங்காரு அடிகளை நீண்ட நாட்களாக அறிவார்கள். ஆனால் இன்று அவருக்கு ஆதிபராசக்தியைத் தவிர வேறொன்றும் தெரியாது. அப்படித் தொண்டு செய்து வருகிறார்கள்.

எனக்கு ஓர் அன்புப் பெயரை ஆதிபராசக்தி சூட்டியிருக்கிறாள். தாடி பாலகன் என்பது அந்தப் பெயர். தாடி பாலகன் போன்றோருக்காகத் தான் அங்கே குடியிருக்கவில்லையாம். அவளே எங்களிடம் இருக்கிறாளாம். ஆனால் கொலைகாரன், ஓயாத குடிகாரன், வேற்றான் மனைவியோடு வாழ்பவன், வஞ்சகம் செய்பவன் ஆகிய இவர்களை எல்லாம் வாழ்விக்கத் தான் ஆதிபராசக்தி அங்கே கோயில் கொண்டு இருக்கிறாளாம். இங்கே பாவமன்னிப்பு என்று பேசுவதற்கு இல்லை. ஒவ்வொருவரையும் மேலே மேலே உயர்த்த வேண்டும் என்பதுதான் நோக்கம். அவர்களையும் அறியாமல் மெல்ல மெல்ல மாறி வருகிறார்கள். என்னையே மாற்றியிருக்கிறாள். நான் போகும்போதெல்லாம் “தியானம் செய் மகனே! மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன்”என்று பேசுவதை சில அன்பர்கள், எல்லாம் எனக்குத் தெரியும் என்று எண்ணி ஆதிபராசக்தியைப் பற்றி என்னைக் கேட்பார்கள். ஆனால் எனக்கு என்ன தெரியும்? உண்மையைச் சொன்னால் அவர்கள் நம்புவதில்லை. நான் மகிரிஷி மகேஷ் யோகி தியான முறையைப் பின்பற்றி வந்தவன். அதில் ஒன்றும் மாற்றம் செய்ய அம்மை கூறவில்லை. அந்தத் தியானம் தான் செய்து கொண்டிருந்தேன். பின்னே சில மாறுதல்களை உபதேசம் செய்தாள். உலகத்துக்கு உதவ உன்னுடைய ஆயுளை நீட்டித் தருகிறேன் என்றாள். சித்திகள் வரும் என்று சொன்னாள். ஆனால் இவை எல்லாம் என் மனத்தில் பாயவில்லை.

சில நாள்களுக்கெல்லாம் வலது கால் வீங்கத் தொடங்கியது. நோயும் பொறுக்க முடியாது. வருந்தியது. “இது கர்ம நோயடா மகனே! இதில் இருந்து உன்னைக் காப்பாற்றக் கூடாது. இதை அனுபவித்தால் தான் உன்னுடைய பிறவி போகும். நோய் பொறுக்க முடியாதது தான். ஆனால் நீ பொறுத்து அனுபவித்துத்தான் இந்தக் கருமத்தை ஒழிக்க வேண்டும்”என்று உறுதியாகக் கூறிவிட்டாள். நோய் பொறுக்க முடியாத நிலையை அடைந்தது. அப்பொழுது தொண்டரிடம் முழுமையாகக் குணப்படுத்திவிடுகிறேன் என்று கூறினாள்.

(தொடர்ச்சி…7ஆம் பக்கம்)

# ஆதிபராசக்தி யுகம் தோன்றி...

(6ஆம் பக்க தொடர்ச்சி)

என் பெரிய மகன் போயிருந்தபோது, “உன் அப்பனுக்கு வந்திருப்பது புற்று நோய். அது இப்பொழுது தான் தன் முழு வடிவத்தைக் காட்டுகிறது. ஆனால் நீங்கள் அஞ்ச வேண்டா. எப்போது அது வெளிப்பட்டதோ அது குணமாகித் தீர வேண்டும்” என்று உறுதி கூறினாள். ஆனால் நோய் குறைந்தாலும் கர்ம நோயை இன்னும் அனுபவிக்க வேண்டும். ஆதலால் இன்னும் முழுதும் தீரவில்லை. இந்த நோயின் அனுபவத்தின்போது பல உண்மைகளை உள்ளிருந்து உணர்த்தினாள். எப்படி உணர்த்துகிறாள் என்று கூடத் தெரியாது. எப்படியோ புதிய உண்மை மனத்தில் பதிந்து விடும். இன்னும் உணர்த்திக் கொண்டு தான் இருக்கிறாள்.

ஆதிபராசக்தி எப்படியோ என்னையும் அறியாமல் என்னை அடிமை கொண்டுவிட்டாள். தியானம் செய் என்ற கட்டளை தவிர வேறு கட்டளை அந்தத் தாய் எனக்கு இட்டதில்லை. ஒரு வேடிக்கை நடந்தது. பங்காரு அடிகளாரை உயர்த்த வேண்டும் அல்லவா? ஆனால் அவரோ நேரே போய் அருள்வாக்கில் கேட்க முடியாது. அதனாலே அருள்வாக்கில் ஆதிபராசக்தி இதனைக் கூறினாள். அதனைக் கூறினாள் என்று பொய் சொன்னவர்களும் உண்டு. சில புதிய அனுபவங்கள் தனக்கு எழுந்ததை என்னிடம் தெரிவித்தார் பங்காரு அடிகளார். அருள்வாக்கிலே அன்னையைக் கேட்கச் சொன்னார். கேட்டேன். “மகனே! அந்தப் பாலகன் மேலும் மேலும் உயர வேண்டாமா? அதனாலே இந்தப் புதிய அனுபவங்களை அவனிடம் வளர்த்து வருகிறேன். அச்சம் ஒன்றும் வேண்டா என்று அந்தப் பாலகனிடம் சொல்” என்று தெரிவித்தாள் அன்னை. அதைக் கேட்டதால் அடிகளார்க்கு மகிழ்ச்சி.

இப்படி அடிகளாரை உயர்த்திப் பார்ப்பதில் மற்றவர்களுக்கு ஈடுபாடு. மகனை மகானாக்குவது என்று சில அன்பர்கள் தொடங்கினார்கள். எல்லா ஏற்பாடும் நடந்தது. அடிகளாரை ஆச்சாரியர் ஆக்குவது என்று கிளம்பினார்கள். ஆனால் யார் அவருக்கு ஆச்சாரியராக இருந்து மந்திரம் சொல்லிக் கொடுப்பது? இந்தச் சிக்கல் யாருக்கும் விளங்கவில்லை. அருள்வாக்கு வரும்போது அடிகளார் இல்லை. ஆதிபராசக்தி தான் அவர் குரலில் பேசுகிறாள். அப்படியானால் ஆதிபராசக்திக்கு அல்லவா மந்திரம் சொல்லிக் கொடுக்க வேண்டும்? அன்னைக்கு எங்கள் அறியாமை விளங்கியது. அருள் உள்ளம் படைத்தவள் அல்லவா? அந்தத் திருவிழாவையே ஆச்சாரியனை வழிபடும் திருவிழாவாக மாற்றிவிட்டாள். நான் தான் ஆச்சாரியனை வழிபட்டு நின்றவன். பின் ஆதிபராசக்திக்குப் பாதபூஜை செய்தவனும் நான் தான். அன்னைக்கு ஏதோ என் மீது ஈடுபாடு. இப்படி எனக்கும் தெரியாமல் துன்பமும், இன்பமும் தந்து என்னை மாற்றி வருகிறாள். என்ன மாற்றம் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. நான் பழைய மனிதன் அல்ல. இந்த முகவுரையே அவள் தான் எழுதுகிறாள். ஆனால் எழுத ஒப்புக்கொண்டது என் செருக்கா? தாய் சொல்கிறபடி குழந்தை நடந்தால் அது தவறா? தாய் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வாள் என்று தாயின் கையைப் பிடித்துக் கொண்டு குழந்தை நடப்பது போல, நடக்கிறேன். அவள் கருத்து என்னவோ! இது என்ன திருவிளையாடலோ!

இதுவரையும் ஆன்மாவைப் பற்றிப் பேசினோம் என்று நினைக்கலாம். இருப்பது பிரம்மம் ஒன்று தான். ஆதிபராசக்தி ஒருத்தி தான். அவள் தான் ஆன்மா. அவள்தான் கடவுள். அவள்தான் மனம். அவள்தான் உடம்பு. அவள்தான் ஜடம். இருப்பது ஒன்றுதான். இதனைப் பிரித்துப் பேசி மனத்தைக் குழப்பிக் கொள்ளக்கூடாது. ஜடத்திலும் அவள்தான் விளையாடுகிறாள். உடம்பிலும் விளையாடுகிறாள். மனத்திலும் விளையாடுகிறாள். ஆன்மாவிலும் விளையாடுகிறாள். அதற்குள் கடவுளாகவும் விளையாடுகிறாள். இந்தக் கண் கொண்டு பார்க்கவேண்டும்.

அப்போதுதான் மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம் என்ற போராட்டம் இருக்காது. பொருளாளரைப் பார்த்து அந்த அம்மா கூறினாள். “தமிழ் படித்த உன்னை விஞ்ஞான நூல்களை ஏன் படிக்க வைத்தேன்? என்னுடைய மெய்ஞ்ஞானத்தை விஞ்ஞானமாக விளக்க அல்லவா? பாலகனே! இதை மறந்துவிடாதே! என்று பலமுறை வற்புறுத்தி உள்ளாள்.

(8ஆம் பக்க தொடர்ச்சி)


## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

சக்தி ஒளி

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயுள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **“ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை”** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**Address: Editor,‘Sakthi Oli’ Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.**

# Sydney - Mandrams - Upcoming Events – August 2017



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452



**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School

Moree Street – Westmead

| | | | |
|---|---|---|---|
| 04.08.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 07.08.2017 | MONDAY– திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 11.08.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 18.08.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 25.08.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## ஆதிபராசக்தி யுகம் தோன்றி...

(4ஆம் பக்க தொடர்ச்சி)

ஆதிபராசக்தி நிலையம் ஒரு கோவில் அல்ல. இந்துக்களுக்கு மட்டும் பொது அல்ல. இந்து பரிபாலனத் துறையைச் சேர்ந்ததும் அல்ல. எல்லோருக்கும் பொதுவாக எழுகின்ற புதிய நிலையம் இது. எதிர்காலம் எப்படி இருக்கும் என்று இங்கே சிறிது புரிந்து கொள்ளலாம். அன்னையின் நிலையத்தில் பல பொறியியல் வேலைகள் நடைபெறுகின்றன. வெளிநாடு சென்ற பொறியியல் அறிஞர்கள் அங்கே வருகிறார்கள். அந்த வேலைகளைப் பற்றிச் சொல்லும்போது அவர்கள் கூடத் திடுக்கிடும்படி புதிய புதிய பொறியியல் கருத்துக்களை அவர்களுக்கே கூறுகிறாள். எனவே அங்கே விஞ்ஞானமும் வளர்கிறது. ஆனால் அணுகுண்டைப் படைத்து உலகத்தை அழிக்கும் விஞ்ஞானம் அல்ல அது. அணுகுண்டைப் படைப்பதற்கு வழிகாட்டிய ஐன்ஸ்டைன் உலகப் போராட்டத்தைக் கண்டு நடுநடுங்கினான். காந்தியின் அமைதிக் கொள்கையைப் பாராட்டினான். சாவதற்கு முன் விஞ்ஞானிகளை எல்லாம் ஒன்று சேர்த்து சாந்தி யுகத்தைத் தொடங்க வேண்டும் என்று முயன்றான். பெட்ரான் ரஸ்ஸல் என்கிற பெரிய அறிஞரோடு ஒத்துழைத்தான். ஆனால் மாநாடு கூடுவதற்குள் மறைந்து போயினான். ஆனால் நல்ல எண்ணம் வீணாகுமா? உலகம் சாந்தி யுகத்துக்குத் தயாராக இருந்ததால், அன்னை பராசக்தி நிலையங்கள் இயல்பாகவே தோன்றலாயின.

இங்கே ஜாதி இல்லை. வேறு வேற்றுமைகளும் இல்லை. ஞாயிற்றுக்கிழமை போய்ப் பார்க்க வேண்டும். ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், பணக்காரர்களும், ஏழைகளும், படித்தவர்களும், படிக்காதவர்களும், எல்லாச் சாதியினரும், எல்லா மதத்தினரும் இங்கே திரண்டு உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். இப்படி உருவாக்குகிறாள் எந்தப் பேதமும் அற்ற சமுதாயத்தை எங்கள் அன்னை. காண முயன்ற முயற்சியின் வளர்ச்சி இது. இங்கே அரசியல் இல்லை. அரசியல் பாழானால் அதை அழிப்பாள். கட்சியில்லாத அரசியலை உருவாக்குகிறாளா? தெரியாது. ஆனால் தேர்தலின் போது கட்சி பேதம் இல்லாமல் சிலரைத் தேர்தலில் நிறுத்தி வெற்றியும் வாங்கித் தந்துள்ளாள். மக்கள் நன்றாக வாழவேண்டும். நாடு செழிக்க வேண்டும். உண்மைக்கல்வி பரவ வேண்டும். குழந்தை வளரும்போது இருந்தே அமைதிக்கான விஞ்ஞானத்தை வளர்க்கப் பழகிக் கொள்ள வேண்டும். வீண் போராட்டம், வேலை நிறுத்தம், சுரண்டல் இவை எல்லாம் நீங்க வேண்டும். இப்படி நடந்தால்தானே உண்மை அரசியல் என்று சொல்லலாம்? அதற்கு வழி கோலுகிறாள் என்பது போல் தோன்றுகிறது. பொருளாதாரமும் சிறக்க வேண்டும். பல பேர் உழைக்க அவர்கள் வயிற்றில் அடித்துவிட்டு ஒரு சிலர் மட்டும் வாழ்வது வாழ்வாகாது. தாய்மைப் பொருளாதாரம் என்று குமரப்பா என்று ஒரு பெரியவர் சொன்னார்.

தாய்மைப் பொருளாதாரம் என்ன? எல்லாமே தாய்மை அறம் தான். அதனை நிலைநாட்டத் தான் ஆதிபராசக்தி வந்திருக்கிறாள். பால் குடிக்கிற குழந்தைக்கும், காளைப் பருவத்தில் உழைக்கின்ற மகனுக்கும் தாய் ஒரே உணவைத் தர முடியுமா? குழந்தைக்குப் பால் கொடுக்க வேண்டும். காளைக்குச் சோறு போட வேண்டும். ஒரு குடும்பம். ஆதில் ஒருவன் நன்றாகச் சாப்பிடுவான். மற்றவர்கள் அவனை விட மிகுதியாக உழைத்தாலும் அவ்வளவு உண்ண மாட்டார்கள். இருந்தாலும் உழைப்பவனுக்காக உணவு என்று வேற்றுமை பாராட்டுவதில்லை. வேண்டிய அளவு உணவு, போதிய அளவு உணவு, அவர் அவர்களுக்குத் தகுந்த உணவு என்று தான் படைக்கிறாள். இதுதான் தாய்மை அறம். எல்லோருக்கும் உழைக்க வாய்ப்பு, படிக்க வாய்ப்பு, ஆய்வுக்கலையில் ஈடுபட வாய்ப்பு இவற்றை ஏற்படுத்திக் கொடுக்கின்றவள் தாய். இந்தத் தாயின் கண் கொண்டு அரசியலையோ, பொருாதாரத்தையோ, விஞ்ஞானத்தையோ, சமுதாய வளர்ச்சியையோ பார்க்க வேண்டும்.

(தொடர்ச்சி...9ஆம் பக்கம்)



# திருமதி அம்மா பதில்கள்

**- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்**

ஒரு சிலர் மதத்தின் பெயரால் செய்யக் கூடாத பாவங்களை எல்லாம் செய்துவிட்டு, தன் மதம் உயரவேண்டும் என்பதற்காகத்தான் இதைச் செய்கிறேன் என்கிறார்களே..! இது சரியா அம்மா…!

தனிப்பட்ட ஒருவருக்கு மட்டும் பாதிப்பை ஏற்படுத்தாமல், மனித சமுதாயத்திற்கே அழிவை ஏற்படுத்தும். மதத்தின் பெயரால் செய்யக் கூடிய, பாவங்கள் அந்தத் தெய்வத்தாலேயே மன்னிக் முடியாத குற்றமாகும். ஒருவனுடைய பாவச் செயல்களால் தன் மதக் கொள்கைகள் உயர்வடையும். அதனால் தன் தெய்வத்திற்கு மகிழ்ச்சியும், பெருமையும் ஏற்படும் என்று சொல்வதெல்லாம் சரியல்ல. எந்த மதமும், எந்தத் தெய்வமும், பிற மதத்தவரைத் துன்புறுத்துவதை விரும்புவதில்லை. அவர்களின் பிடிவாத குணத்துக்கும், தீய எண்ணங்களுக்கும் மதத்தையும், தெய்வத்தையும் முன்நிறுத்திப் பழிவாங்குகிறார்கள். இத்தகைய செயல்கள் கண்டிக்கத் தக்கவை. இதனால் அப்பாவி மக்கள்தான் பலியாகிறார்கள்.

## ஆதிபராசக்தி யுகம் தோன்றி…

(8ஆம் பக்க தொடர்ச்சி)

அங்கே சண்டை இல்லை. பஞ்சம் இல்லை. எங்கும் வளந்தான் கொழிக்கிறது. இப்படி ஒரு சமுதாயத்தை உலகத்தில் மாற்றி அமைத்து வர ஆதிபராசக்தி முனைந்து உள்ளாள். வாழ்க ஆதிபராசக்தி நிலையம். அவள் எண்ணம் விரைவில் நிறைவேறுவதாக! ஒவ்வொரு ஊரிலும் ஆதிபராசக்தி நிலையம் இப்படி எழுதல் வேண்டும். அருளே வடிவான அவள் நினைத்தால் எது கைகூடாது? ஆனால் சொல்லுக்கு அப்பாற்பட்ட அவள் கருத்தைச் சொல்லில் எப்படிக் கூறுவது? ஏதோ உளறினேன். அந்த உளறலிலே அவளுக்கு ஓர் விருப்பம்! வாழ்க ஆதிபராசக்தி!

ஓம் சக்தி!

நன்றி: மேல்மருவத்தூர் அன்னையின் அற்புதங்கள் - பதிப்பு 70ஆம் அவதாரத்திருநாள்

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

*ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!*



## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

### ஆலய சிறப்பு விழாக்கள்

### 2017 - ஸ்ரீ ஹேவிளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஆடி | 22 | 07.08.2017 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆவணி | 05 | 21.08.2017 | திங்கள் | அமாவாசை - வேள்வி |
| ஆவணி | 20 | 05.09.2017 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 03 | 19.09.2017 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| புரட்டாசி | 04 | 20.09.2017 | புதன் | சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம் |
| புரட்டாசி | 19 | 05.10.2017 | வியாழன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஐப்பசி | 02 | 19.10.2017 | வியாழன் | அமாவாசை - வேள்வி |
| ஐப்பசி | 17 | 03.11.2017 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 02 | 18.11.2017 | சனி | அமாவாசை - வேள்வி |
| கார்த்திகை | 17 | 03.12.2017 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 02 | 17.12.2017 | ஞாயிறு | அமாவாசை - வேள்வி |
| மார்கழி | 10 | 25.12.2017 | திங்கள் | கிறிஸ்மஸ் |

## Melbourne - Mandrams – Upcoming Events – August 2017

### Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

Contact: +61 451 374 878, +61 433 326 620

contactus@supremesakthi.com
www.supremesakthi.com

**Joint Prayers:** Every 3rd Sunday of the month
**Thiruvilakku Poojai:** Every month on the Sunday following the Full Moon day

**Southern Community Centre,**
Rupert Drive - Mulgrave 3170 (Mel.Ref:: 80 F 5)

| | | | |
|---|---|---|---|
| 13.08.2017 | Sunday | 09.00a.m.<br>06.10p.m. | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>"Thiru Vilakku Pooja"<br>"திருவிளக்குப் பூஜை" |

## "மெய்யுணர்வுச் சிந்தனை"

ஐயுணர்வு எய்திய கண்ணும் பயன் இன்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு

என்ற குறட்பா உணர்ந்த கருத்தோடு ஓங்கும் திருக்குறளாகும். ஐயுணர்வு என்பது ஐம்பொறிகளாலும் கண்டும், கேட்டும், உண்டும் உயிர்த்தும் உற்றும் அறிவது. இவற்றால் மட்டும் பயன் இல்லை என்பது கருத்து.

ஒருவர் சர்க்கரையை விரும்பி உண்கிறார். நோய்க்கு ஆளாகிறார். மற்றொருவர் பாகற்காயை விரும்பி உண்கிறார். அவர் நலமுடன் வாழ்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது? வாய்க்குச் சுவையான உணவு உடலுக்கு நலம் தரவில்லை. வாய்க்குச் சுவை இல்லாத உணவு உடலுக்கு நலம் தருகிறது. இதனை உணர்த்தவே

எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்றார் திருவள்ளுவர்.

எனவே மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளாலும் அறிவதனை மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் உட்கருவிகளால் ஆராய்ந்து தெளிய வேண்டும் என்பர். அதனால்தான் ஞானாமிருதம் என்ற நூலின் ஆசிரியர் ஐம்புலன்களை(பொறிகளை)ச் சாளரங்களாகவும் அந்தக் கரணங்களை அமைச்சர்களாகவும் உருவகம் செய்தார். அந்தக் கரணங்கள் அமைச்சர் போன்றவை என்பதை மெய்கண்டாரும் வழிமொழிந்தார். ஆகவே எது பொய் எது மெய் என்று துணிவதற்கு அந்தக் கரணங்களே துணையாகும்.

டாக்டர். ஔவை நடராசன்
முன்னாள் துணைவேந்தர்

மெய்யுணர்வு என்று கூறும்போது எது மெய்? எது பொய்? என்ற தெளிவும் வேண்டும். இதற்கொரு எளிய செயன்முறை விளக்கமும் உண்டு. கையில் சிறிதளவு திருநீற்றை வைத்துக்கொண்டு அதனை நோக்கி மெய் மெய் என்று எத்தனை முறை கூறினாலும் எந்த மாற்றமும் நிகழாது. ஆனால் பொய் என்று ஒரு முறை கூறினால் உடனே அது பறந்துவிடும். பொய் மெய் என்ற சொற்களே பொய்ப்பொருளின் நிலையாமையும் மெய்யான பொருளின் நிலையான தன்மையையும் காட்டுவன என்று கூறுவர்.

திருவள்ளுவர் மெய்யுணர்தல் பற்றிக் கூறுவதற்கு முன் நிலையாமை என்றோர் அதிகாரமும் வகுத்தார். அந்த அதிகாரத்தில் உலகத்தின் பெருமை நேற்றிருந்தவர் இன்றில்லை என்ற நிலையில்

நெருதல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.
என்று கூறினார்.

உலக வாழ்வில் பல ஆண்டுகள் வாழ்ந்த ஒருவர் கல்லாது கழிந்துவிட்ட இளமையை நினைக்கிறார். "கல்லா இளமை யாண்டுண்டு சொல்லோ"என்று கவலைப்படுகிறார்.

(தொடர்ச்சி..11ஆம் பக்கம்)

## Melbourne - Mandrams – Upcoming Events – August 2017



# Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.

**Vermont South Community House**,
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 04.08.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 07.08.2017 | MONDAY– திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 11.08.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 18.08.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 25.08.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

**Lalor**

Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| 06.08.2017 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## “மெய்யுணர்வுச்...

இளமையும் யாக்கையும் போலவே வளமையும் நிலையற்றதே. ஒருவர் செல்வத்தைச் சேர்த்தார். அந்நாளில் நிதி நிலையங்கள் (வங்கிகள் இல்லை. எனவே அந்தச் செல்வத்தைப் புதைத்து வைத்தார். எவரிடமும் சொல்லவில்லை. ஒருநாள் அவர் இறந்துவிட்டார். அவர் புதைத்து வைத்த செல்வம் எவருக்கும் பயன்படாமலே போய்விட்டது. காலப்போக்கில் அந்த வீட்டை இன்னொருவர் வாங்கினார். அவர் வீட்டைப் புதுப்பிக்கும்போது முன்பு யாரோ புதைத்து வைத்த செல்வம் அவருக்குப் புதையலாகக் கிடைத்தது. எல்லோரும் அவரைக் கொடுத்து வைத்தவர் என்று புகழ்ந்தார்கள். பொருளைப் புதைத்து வைத்தவர் வைத்திழந்தார். பொருளைப் புதையலாகப் பெற்றவர் முன்னே பிறருக்கு உதவி செய்தவர். ஆதலினால் அவர் கொடுத்து வைத்தவர் ஆனார்.

திருவள்ளுவர் பொருளைச் சேர்த்து வைப்பதற்கு ஓரிடம் கூறுகிறார்.

“அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பேற்றான் பொருள்வைப் புழி”

கடல் சூழ்ந்த உலகில் நாம் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வ நிலையாமை என்ற மூவகையில் நிலையாமையைக் காண்கிறோம். உடம்பு இருக்கும்போதே நாம் நல்ல செயல்களைச் செய்ய வேண்டும்.

“நிற்கின்ற போதே நிலை யுடையான் கழல்
கற்கின்ற செய்ம் மின்..”
என்றார் திருமூலர்.
நிலையுடையான் யார்? அவனை எங்கே தேடுவது? திருவள்ளுவர் நிலையான பொருளை மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் மூன்று சொற்களால் சுட்டுகின்றார். 1) உள்ளது 2) மெய்ப்பொருள் 3) செம்பொருள் என்பன அச்சொற்கள்.

தத்துவச் சிந்தனையாளர் மூன்று பொருள்களைக் குறிப்பிடுவர். உலகம், உயிர்கள், கடவுள் என்பனவே அந்த முப்பொருள். உலகாயுதர் உலகத்தை மட்டுமே உடன்படுவர். ஒரு பொருட் கொள்கையர் கடவுளை மட்டுமே உடன்படுவர். சைவ சமயமே முப்பொருள் உண்மை கூறுகின்றது என்றாலும் மூன்று பொருளுக்குள்ளே சிறுசிறு வேறுபாடு உண்டு.

(தொடர்ச்சி..12ஆம் பக்கம்)

# Divine Miracles at Melmaruvathur

## The result of singing Thevaram:

One devotee lived by singing Thevaram. He spent sometime in Sri Lanka running a Thevaram school and he also taught Thevaram for children. The Sri Lanka Govt. refused to renew his visa; he had to return to India.In Tamil Nadu the singing of Thevaram was not considered great. He could live in India by teaching Thevaram. Some Tamils who came from South Africa, very happy with his singing, invited him to their country. They discussed and decided upon the salary that he would be paid. He got his passport ready. It was necessary to make special arrangements to go to South Africa. The people from South Africa had sent an appointment order and agreed to send his visa. The lover of Thevaram came to Maruvvathur and met Mother. He spoke about all his difficulties. Mother said, "I shall send you overseas soon, your difficulties will pass away."

He told Mother, " By your Grace, all arrangements have been made and we are expecting the visa. As soon as it comes I will start. Mother asked him "I which country are you going" and he replied "South Africa". Mother said, "No son, I am going to send you in the Eastern direction to a country which is far away. The country you are talking about is in the Western direction. You will be better off in the country where I shall send you. He tried for Malaysia and other countries but there were no opportunities there. He did not understand where he was going to be sent.

15 days before his visa arrived from South Africa, some devotees came from Tiji. They heard his Thevaram and invited him to their country and offered more salary than what he was offered earlier. In 1980 in the month of Februar he went to the Tiji islands in the East.

***

## "மெய்யுணர்வுச்... (11ஆம் பக்க தொடர்ச்சி.....)

ஒரு பனிக்கட்டி, பளிங்குக்கல், கற்கண்டு மூன்றினையும் ஒரே அளவில் எடுத்து வைக்க வேண்டும். பனிக்கட்டி சிறிது நேரத்தில் கரையும். மெல்ல மெல்ல மறையும். பளிங்குக்கல் மறையாது. கற்கண்டோ கண்ணெதிரே கரையாது. நாவில் கரையும் இன்பம் தரும் இந்த மூன்று தன்மைகளையே உண்மை, அறிவு, இன்பம் (சத்து சித்து ஆனந்தம்) என்றும் கொள்ளலாம்.

எது நிலையான இன்பம் தருமோ அதுவே பரம்பொருள். பிள்ளைப்பருவத்தில் தின்பண்டம் இனிமை தரும். இளமைக் காலத்தில் வாழ்வுச் செல்வம் இன்பம் தரும்.

மேலும் வளர்ந்தால் தலைமைப் பொறுப்பு பெருமை தரும். தலைமைப் பொறுப்பு "துன்பம் அல்லது தொழுதகவு இல் என்பது இளங்கோவடிகள் பொருண்மொழி. எல்லையில் இன்பம் தருபவன் இறைவன்.

> கனியினும் கட்டிபட்ட கரும்பினும்
> பனிமலர்க்குழல் பாவை நல்லாரினும்
> தனிமுடி கவித்தாளும் அரசினும்
> இனியன் தன் னடைந்தார்க்கு இடைமருதனே

என்பது நாவரசர் நன்மொழி.

அவனை எங்கே காண்பது? என்னுள்ளே தேடிக்கொண்டேன் என்று அவரே உரைத்தார். அந்த நிலை நமக்கு வரவேண்டுமே! நாம் நாவுக்கரசராகும் வரை கடவுளை எப்படிக் காண்பது? இறைவன் எங்கும் இருக்கிறான், என்றாலும் உயிர் உள்ள பொருள்களிடம் அவனைக் காணலாம்.

ஓர் அடியவர் இறைவனை நோக்கி "நீ என் வீட்டுக்கு வரவேண்டும்"என்று வேண்டினார். இறைவனும் "நாளை மாலை ஐந்து மணிக்கு வருகிறேன்" என்றார். அடியவர் வீட்டையும் சுற்றுப்புறத்தையும் அழகு செய்தார். இறைவனை எதிர்பார்த்திருந்தார். அப்போது ஒரு முதியவர் பசியால் வருந்தி வந்தார். இறைவன் வருகின்ற நேரம் என்று அவரை விரட்டினார். அதற்குப் பிறகு நலிந்து மெலிந்த ஒரு மூதாட்டி வந்தார். அவரையும் விரட்டிவிட்டார். இதற்குள் குறித்த நேரம் வந்துபோய்விட்டது.

அடியவர் இறைவனை நோக்கி "இறவைா என்னை ஏமாற்றி விட்டாயே" என்றார். இறைவனோ நான் மூன்று முறை வந்தேன். நீதானே விரட்டி விட்டாய் என்றார். அப்படியானால் கடவுள் யார்? எவ்வுயிரும் இறைவன் இருப்பிடம்தானே!

(தொடர்ச்சி..14ஆம் பக்கம்)

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## இதுதானடா மெய்ஞ்ஞானத்திற்கும், விஞ்ஞானத்திற்கும் உள்ள வித்தியாசம்!

உத்தமசாமி என்பவர் விவசாயத்துறையில் டாக்டர் பட்டம் பெற்று கும்பகோணத்தில் பணியாற்றிக் கொண்டு வந்தவர். மேல்மருவத்தூர் பற்றியும், அன்னையின் மகிமை பற்றியும் சில பத்திரிகைகள் மூலம் அறிந்து அன்னையிடம் வந்தார். அருள்வாக்கு கேட்கச் சென்றார்.

“மகனே! நீ அம்மாவிடம் வந்துவிட்டாய். இனிமேல் அம்மாவின் அருள் உனக்குக் கிடைக்கும். நீ ஒன்பது பூவும், ஒன்பது மஞ்சளும் ஒரு துணியில் கட்டிப் பூசை செய்து மறுமுறை வரும்போது கொண்டு வா!” என்றாள் அன்னை.

அவர் பட்டமேற்படிப்பு முடித்துவிட்டு, மேற்படிப்பின் நிமித்தம் வெளிநாடு செல்ல விரும்பி முயற்சி செய்து பலனளிக்காத நிலையில் அம்மாவின் அருள் வேண்டும் என்று கோரினர்.

“மகனே! உன்னை இவ்வாண்டு (1983) அம்மா வெளிநாடு அனுப்புவாள். அம்மாவின் அருள் உனக்கு இனிமேல் உண்டு” என்றாள் அன்னை. இது நடந்தது 27.04.1983ஆம் நள்.

திரு.உத்தமசாமி 6.6.83 அன்று விடுப்பிலிருந்தபோது அவர் பணியாற்றிய அலுவலகத்திலிருந்து அவருக்கு ஒரு தந்தி வந்தது.

“பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறவுள்ள பயிற்சிக்காகத் தங்களை அனுப்ப உள்ளோம். 15.8.1983 முதல் 25.11.1983 வரை பயிற்சிக்காலம். தங்களைப் பற்றிய விவரங்களை இந்திய அரசுக்கு உடனே அனுப்பி வைக்கவும்” என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

கடந்த ஐந்தாண்டுகளாகப் பல நாடுகளுக்கு மேற்கல்விக்காக முயற்சி செய்தும் பலன் அளிக்காத நிலையில், மேற்குறித்த ஆணை கிடைத்தது. அன்னையின் அருளால்தன் என்று மகிழ்ச்சியில் திளைத்தார் டாக்டர் உத்தமசாமி.

அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொண்டு, பிலிப்பைன்ஸ் நாட்டில் மூன்றரை மாதப்பயிற்சியை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பினார்.

தென்கிழக்கு ஆசியாவில் உள்ள 12 நாடுகளிலிருந்து 17 பேர் மட்டும் பங்குபெற்ற அனைத்து நாட்டுப் பயிற்சி அது! இந்தியாவிலிருந்து சென்ற இருவரில் திரு.உத்தமசாமி ஒருவர்.

வெளிநாட்டுப் பயிற்சியை முடித்துக்கொண்டு அன்னை அருள்வாக்கு ஆணையின்படி ஒன்பது பூவும், ஒன்பது மஞ்சளும், பூசையில் வைத்து வழிபாடு செய்து 19.02.1984 அன்று மேல்மருவத்தூர் வந்தார். அன்னையிடம் அருள்வாக்கு கேட்டார்.

18.02.1984 அன்று காலையில் அவர் வீட்டுத் தோட்டத்தில் பூத்த செம்பருத்திப் பூக்கள் ஒன்பதை ஒன்றாகவும், ஒன்பது மஞ்சள் கிழங்குகளை ஒன்றாகவும் இரு தனித்தனி முடிச்சுகளாகக் கட்டி அவற்றை ஒரு சேரக்கட்டி பூசையறையில் வைத்து வழிபாடு செய்துவிட்டே எடுத்து வந்தார்.

19.02.1984 அன்று அன்னையிடம் அருள்வாக்கு கேட்கச் சென்றார்.

“அதைப் பிரித்துக் காட்டடா மகனே!” என்றாள் அன்னை.

பையிலிருந்து எடுத்து முதலிலல் பிரித்துக் காட்டியது செம்பருத்திப் பூக்கள் கொண்ட துணி முடிச்சு.

“பூக்களை எடுத்து முகர்ந்து பார்த்து என்ன வாசம் வருகிறதென்று சொல்லடா மகனே!” என்றாள் அன்னை.

முகர்ந்து பார்த்த திரு. உத்தமசாமி “அம்மா மஞ்சள் வாசம் வருகிறது” என்றார்.

“இன்னொரு முறை முகர்ந்து பார்த்து என்ன வாசம் வருகிறதென்று கூறடா?” என்றாள் அன்னை.

மீண்டும் பூக்களை முகர்ந்து பார்ந்து என்ன பதில் சொல்வதென்று புரியாமல் திணறினார். காரணம் இப்போது எந்தவொரு வாசமும் வரவில்லை.

“சொல் மகனே! சொல்” என்றாள் அன்னை.
“அம்மா! இப்போது ஒரு வாசமும் வரவில்லை” என்றார் அவர்.

“இதுதானடா மெய்ஞானத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் உள்ள வித்தியாசம்! நீ ஒரு விஞ்ஞானி! படித்தவன்! இப்பொழுது தெரிந்துகொள் வித்தியாசத்தை!” என்று கூறிவிட்டு இந்தப் பூக்களை எடுத்துச் சென்று ஆற்றில் விட்டுவிடடா!” என்றாள் அன்னை.

(8ஆம் பக்க தொடர்ச்சி)

## அருள்வாக்கும் அனுபவங்களும்....

செம்பருத்திப் பூவிலிருந்து மஞ்சள் வாசம் வருவதும், மறுவிநாடியே அந்த வாசம் இல்லாமற்போனதும் விஞ்ஞானத்தால் ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. அவ்வாறு நடந்தது! அம்மாவின் சித்து விளையாட்டுக்களில் இதுவும் ஒன்று.

அதுமட்டுமா? 18.02.1984 அன்று காலை பறிக்கப்பட்டு 19.02.1984 அன்று கும்பகோணம் வந்து சேரும் வரை அந்த ஒன்பது செம்பருத்திப் பூக்களும் அன்று பறித்த பூக்கள் போலவே வாடாமல் இருந்ததும் அன்னையின் அருளால்தான்.

## “மெய்யுணர்வுச்... (12ஆம் பக்க தொடர்ச்சி.....)

பார்க்கின்ற மலரூடும் பரம்பாருளையே பார்த்த தாயுமானவரும்
எவ்வுயிரும் தம்முயிர் போல்
எண்ணும் தபோதனர்கள்
செவ்வறிவை நாடி மிகச்
சிந்தைவைப்ப தெந்நாளோ?
என்று வேண்டினார்.

சாத்திர நூல்களின் அணைந்தோர் தன்மைபோல் நீத்தார் பெருமை பேசிய முதற்பாவலரும் அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான் என்று கூறியிருப்பதும் நம்மை நெகிழ வைக்கின்றது. மேல்மருவத்தூர் வழிபாட்டில் இத்தகைய புதுமை பொதுமையாக மலர்ந்துள்ளது.

எவ்வுயிரும் இறைவனது திருவுயிராகக் காண்போம்! பார்க்கின்ற மலரூடும் பரம்பொருளையே காணும் உயர்நிலை பெருக வேண்டும்.
ஓம் சக்தி!

## ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

**2017**

| | | | | |
|---|---|---|---|---|
| 03.08.2017 | வியாழன் | ஆடி | 18 | **ஏகாதசி விரதம்** |
| 04.08.2017 | வெள்ளி | ஆடி | 19 | **வரலக்குமி விரதம்** |
| 05.08.2017 | சனி | ஆடி | 20 | சனிப்பிரதோஷ விரதம் |
| 06.08.2017 | ஞாயிறு | ஆடி | 21 | விஷ்ணு கொடியேற்றம்<br>- ஸ்ரீ சிவா – விஷ்ணு ஆலயம் - கரம்டவுண்ஸ் - மெல்போர்ண் |
| 07.08.2017 | திங்கள் | ஆடி | 22 | **பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 11.08.2017 | வெள்ளி | ஆடி | 26 | **மஹாசங்கட சதுர்த்தி** |
| 13.08.2017 | ஞாயிறு | ஆடி | 28 | ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 15.08.2017 | செவ்வாய் | ஆடி | 30 | கார்த்திகை விரதம் |
| 16.08.2017 | புதன் | ஆடி | 31 | கற்பக விநாயகர் அலங்கார உற்சவ ஆரம்பம் - நியுசவுத் வேல்ஸ் |
| 18.08.2017 | வெள்ளி | ஆவணி | 02 | ஏகாதசி விரதம் |
| 19.08.2017 | சனி | ஆவணி | 03 | சனிப் பிரதோச விரதம் |
| 21.08.2017 | திங்கள் | ஆவணி | 05 | **அமாவாசை விரதம்** |
| 25.08.2017 | வெள்ளி | ஆவணி | 09 | **விநாயக சதுர்த்தி விரதம்**<br>கற்பக விநாயகர் அலங்கார உற்சவ நிறைவு – நியுசவுத் வேல்ஸ் |
| 27.08.2017 | ஞாயிறு | ஆவணி | 11 | ஷஷ்டி விரதம் |
| 31.08.2017 | வியாழன் | ஆவணி | 15 | ஆவணி மூலம் |
| 03.09.2017 | ஞாயிறு | ஆவணி | 18 | பிரதோஷ விரதம்<br>இரதோற்சவம்<br>- ஸ்ரீ சிவா – விஷ்ணு ஆலயம் - கரம்டவுண்ஸ் - மெல்போர்ண் |